[1994 நவம்பர் 7

மக்களின் குறைகளை, கோரிக்கைகளைக் கேட்டறிந்து, நிவர்த்தி செய்ய வேண்டுமென்று எந்த முதலமைச்சரும் செய்யாத அளவுக்கு, இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் செய்து கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில், மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாண்டியம்மாள் அவர்களின் கோரிக்கையை சம்பந்தப்பட்ட துறைக்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண்38, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

38—

ஆறுகாணி, பத்துகாணி நிரப்பு ஒன்றியச் சாலைகளை மேம்பாடு செய்தல்

20244-திரு. மா. சுந்தரதாஸ்:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழங்குடி மக்கள் வாழும் ஆறுகாணி-ஒருநூறாம் வயல், ஆறுகாணி-பத்துகாணி நிரப்பு போன்ற ஒன்றியச் சாலைகளை மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் ஏறத்தாழ 18 ஆயிரம் மக்கள் தங்குகிறார்கள். அவர்கள் வசிக்கும் இரண்டு கிராமங்களைச் சேர்க்கும் ஒரு பாலம் வெஸ்டர்ன் காட் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கட்டியிருந்தார்கள். அது 1984 வெள்ளத்திலே அழிந்துவிட்டது. முழுவதும் அழிந்துவிட்டது. ஹைவேசில் கேட்டால், அதற்கு 'நார்ம்ஸ்' இல்லை என்று சொல்லி, கட்டவில்லை. அந்த மக்கள், பத்துகாணி நிரப்பு என்ற பகுதியிலிருந்து வருவதற்கு வழியில்லாமல் இருக்கிறார்கள். அதனால் மேற்கு மலைத்

1994 நவம்பர் 7]

தொடர்ச்சி அபிவிருத்தித் திட்டத்தில் இல்லை என்றாலும்கூட, நம்முடைய அரிசன நலத் துறையிலிருந்தாவது பணம் ஒதுக்கி, அந்தப் பாலத்தைக் கட்டித் தர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழங்குடி மக்கள் வாழும் பகுதியிலுள்ள ஆறுகாணி-ஒருநூறாம் வயல், ஆறுகாணி-பத்துகாணி நிரப்பு போன்ற ஒன்றியச் சாலைகளை மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தில் செய்வதற்கான சாத்தியக்கூறு எதுவும் இல்லை. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டமானது அப்பகுதியில் சுற்றுப்புறச் சூழல் அபிவிருத்திக்காக மட்டுமே ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். ஆனால், இந்தத் திட்டத்தின்கீழ் வனப் பகுதிகளை அழித்து சாலைகள் அமைத்தல், கட்டிடங்கள் கட்டுதல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்த மத்திய அரசு அனுமதிப்பதில்லை. அதன் அடிப்படையில் சென்ற இரண்டு ஆண்டுகளாக மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் திட்டங்கள் ஏதும் இத்துறையால் செயல்படுத்தப்படவில்லை. மேலும் பழங்குடியினர் அபிவிருத்திக்காக மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் செலவு செய்ய 1992-93-ஆம் ஆண்டு திட்ட முன்மொழிவு கூட்ட விவாதத்தில் பணம் ஒதுக்கீடு செய்ய இயலாது என மத்திய திட்டக் குழு முடிவு செய்துவிட்டது. அதனால் இதைச் செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அங்கே பாலம் கட்டப்பட்டிருக்கிறது. புதிதாக நாம் பாரஸ்டை அழிக்கப்போவதில்லை. ஏற்கெனவே பாலம் அங்கே இருக்கிறது. பல ஆண்டுகளாக அது செப்பனிடப்படாமல், மோசமாக இருக்கிறது. ஹைவேசில் கேட்டால் அவர்களுடைய 'நார்மஸ்'-ல் வரவில்லை, அதனால் ஹில் ஏரியாவில் கட்ட முடியாது என்று சொல்லுகிறார்கள். ஆகையால் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பணம் ஒதுக்கவில்லை என்றாலும்கூட, நம்முடைய ஆதி திராவிட நலத் துறையில் இருந்தாவது இந்தச் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வனப் பகுதிக்கு உட்பட்ட இடமாக இருக்கிற காரணத்தால், மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்றுத்தான்

செய்ய முடியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத் தந்தால், இது பற்றிப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *39*, திருமதி கற்பகம் இளங்கோ, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

39—

செட்டிநாட்டு வலையர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

**26927*-திருமதி கற்பகம் இளங்கோ :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் இருக்கும் செட்டிநாட்டு வலையர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், செட்டிநாட்டு வலையர்களுக்கு வீடுகள் கட்டித் தருவது குறித்து கோரிக்கை ஏதும் இதுவரை பெறப்படவில்லை. மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்புகளில் நரிக்குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது ஆதி திராவிடர்களுக்கு மட்டும் இலவசத் தொகுப்பு வீடுகள் என்பதை மாற்றி இதர வகுப்பினருக்கும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கி, அதனைக் கட்டித் தருவதற்கு ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எங்களது பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில், காரைக்குடி தொகுதியில் சாக்கோட்டை ஒன்றியத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட செட்டிநாட்டு வலையர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அவர்கள் வாழ்க்கைத் தரத்தில் பின்தங்கி, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்வதாலும், அவர்கள் தினக் கூலிகளாக இருப்பதாலும், அடுத்து